செ.வெ.எண் : 35/செப்டம்பர் நாள்: 18.09.2019

# இராமநாதபுரம் மாவட்டம்

## திருவாடானை வட்டம், மங்களக்குடி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் 80 பயனாளிகளுக்கு ரூபாய் 67.07 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட/கடன் உதவிகள்

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், மங்களக்குடி கிராமத்தில் இன்று (18.09.2019) நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பாக 80 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.67.07 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:

பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மாவட்ட நிலையிலான அரசுத்துறை அலுவலர்கள் கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று பொதுமக்களின் குறைகளைக் கேட்டறிந்து உடனடி தீர்வு காணும் விதமாக மாதந்தோறும் ஒரு கிராமம் தேர்வு செய்யப்பட்டு மக்கள் தொடர்பு திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இம்முகாமில் அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்தும், அத்திட்டங்களின் மூலம் பயன்பெறுவதற்கான வழிமுறைகள் குறித்தும் பொதுமக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் அந்தந்த துறை சார்ந்த அலுவலர்கள் மூலம் விளக்கி கூறப்படுகிறது. பல்வேறு அரசுத்துறைகளின் மூலம் விழிப்புணர்வு காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி மாவட்டத்திலுள்ள 400 வருவாய் கிராமங்களிலும் 21.08.2019 முதல் 31.08.2019 வரையிலான நாட்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு குறை தீர்வு திட்டம் முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இதுதவிர, ஊரகப் பகுதிகளில் உள்ள பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி, சாலை வசதி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கி தொடர்ந்து கண்காணித்திட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. குறிப்பாக, இவ்வாண்டு கோடைகாலத்தையொட்டி பொதுமக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்திட ஏதுவாக ரூ.15 கோடி மதிப்பில் பல்வேறு குடிநீர் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேபோல, எதிர்வரும் மழைக்காலத்தை கருத்தில் கொண்டு மழை நீரை சேமித்திட ஏதுவாக குடிமராமத்து திட்டத்தின் கீழ் மாவட்டத்திலுள்ள 69 பொதுப்பணித்துறை கண்மாய்கள், ஊரக வளர்ச்சித் துறையின் கீழுள்ள 224 சிறுபாசன கண்மாய்கள், 988 ஊரணிகளில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய நீர்நிலை புனரமைப்புப் பணிகளை சிறப்பாக செயல்படுத்துவதோடு நீர்நிலைகளின் கரைப்பகுதிகளில் பனைமரம், வேம்பு, புளியமரம் உள்ளிட்ட பலன் தரும் மரக்கன்றுகளை நடவு செய்து பராமரித்திட வேண்டும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டிற்கு 1.1.2019 முதல் தடை விதித்து உத்தரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில், பொதுமக்கள் பிளாஸ்டிக் பொருட்களை தவிர்த்து அதற்கு மாற்றாக துணிப்பைகள், பாத்திரங்கள் போன்றவற்றை பயன்படுத்திட வேண்டும். அதன் மூலம் சுற்றுப்புற சுகாதாரம் மேம்படுவதோடு மண்வளமும், நிலத்தடி நீர்வளமும் மேம்படும் என பேசினார்.

இந்நிகழ்ச்சியில், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் திரு.ப.மு.முருகேசன், சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.ச.சிவசங்கரன், இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் (பொ) திரு.கோபு, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.ப்ராங்க்ளின் கிறிஸ்டோபர், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.ஜெ.சரவணக்கண்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.எஸ்.எஸ்.சேக்அப்துல்லா, வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் திரு.பாலாஜி, மாவட்ட தொழில்மைய பொது மேலாளர் திருமதி.பா.மாரியம்மாள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திருமதி.மு.கயல்விழி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி.வ.ஜெயந்தி, திருவாடானை வட்டாட்சியர் திரு.என்.சேகர், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ராஜேந்திரன் உட்பட பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**